கொரிந்தியர் 1 13:4-5

தேவசிநேகமோ பொறுமையுள்ளது, தயவுள்ளது. தேவசிநேகம் பொறாமைப்படாது, துடுக்காய்ச் செய்யாது, அகங்காரப்படாது. பெருமையைத் தேடாது, சுயநலத் தை விரும்பாது, கோபங்கொள்ளாது, தீங்கு நினையாது.

பழமொழியாகமம் 14:29

பொறுமையாயிருக்கிறவன் மிகு விவேகத்தைக் காட்டுகிறான்; பொறாமையாயிருக்கிறவனோ வெனில் தன் மதியீனத்தை எடுத்துக் காட்டுகிறான்.

எபேசியர் 4:2

எவ்வித தாழ்ச்சியோடும், சாந்தத்தோடும், பொறுமையோடும், ஒருவ ரொருவரைப் பரம அன்போடு தாங்கிக் கொண்டு,

உரோமாபுரியார் 1 12:12

நம்பிக்கையில் அகமகிழுங்கள்; துன்பத்தில் பொறுமையாயிருங்கள்; ஷெஜபத்தில் நிலைத்திருங்கள்.

கலாத்தியர் 6:9

ஆகையால் நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போமாக. ஏனெ னில் நாம் சோர்ந்துபோகாதிருந்தால், தக்க காலத்திலே பலனையறுப்போம். (2 தெச. 3:13.)

உரோமாபுரியார் 1 8:25

ஆனால் நாம் காணாததை நம்பினால், அதற்கும் பொறுமையோடே காத்துக்கொண்டிருக்கிறோம்.

பழமொழியாகமம் 16:32

வல்லவனை விடப் பொறுமை சாலி உத்தமன்; நகரங்களை முற்றிக் கையிட்டவனைவிடத் தன் மனதை ஆய்பவன் உத்தமன்.

சங்கீதங்கள் 37:7

நான் மிகவுந் தரித்திரனாய் உடல் கூனிப்போய் நாள் முழுவதுந் துக்கத்தால் முகம் வாடித் திரிகிறேன்.

சங்கீதங்கள் 27:14

யாத்திராகமம் 14:14

ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார், நீங்களோ பேசாதிருப்பீர்கள் (என்றுரைத்தான்.) மூ 14-ம் வசனம். இங்கே மோயீசனுடைய சுகிர்த சாந்தகுணம் எவ்வளவு நேர்த்தியாய் விளங்குகிறது. அவர் இஸ்றாயேலியரின்பேரில் பட்சம்வைத்து அவர்களுக்கு எத்தனை உபகாரங்களைச் செய்துவந்திருந்தாலும் அவர்கள் நன்றிகெட்டவர்களாய் அவர் மேல் எப்போதும் முறுமுறுத்து விரோதித்து வந்தார்கள். ஆனால் அவர் சுவாமியுடைய மகிமையை மாத்திரந் தேடுகிறவராகையால் சகலத்தையும் பொறுமையோடு சகித்துக்கொண்டு வந்தார்.

இராயப்பர் பொது நிருபம் 2 3:9

சிலர் எண்ணுகிறபடி ஆண்டவர் தமது வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற்குத் தாமதிப்பதில்லை. ஆனாலும் அவர் ஒருவராவது கெட்டுப்போக விரும்பாமல், எல்லாரும் தவத்துக்குத் திரும்பவேண்டுமென்று விரும்பி, உங்களைப்பற்றிப் பொறுமையோடு சகித்து வருகிறார். (எசே. 18:23; 1 தீமோ. 2:4.)

கொலோசியர் 3:12

ஆதலால், சர்வேசுரனால் தெரிந் துகொள்ளப்பட்ட நீங்கள் பரிசுத்தரும், பிரியமுள்ளவர்களுமாய்த் தயாளமான உள்ளத்தையும், சாந்தத்தையும், தாழ்ச்சி யையும், அடக்கவொடுக்கத்தையும், பொறுமையையுந் தரித்துக்கொண்டு,

உரோமாபுரியார் 1 15:5

பொறுமையையும், ஆறுதலையும் தந்தருளுகிற சர்வேசுரன் சேசுக்கிறீஸ்து நாதருக்கு ஒத்தவண்ணம் நீங்கள் ஒரு வருக்கொருவர் ஏக சிந்தையுள்ளவர்க ளாகும்படி உங்களுக்குக் (கிருபை) செய்வாராக. (1 கொரி. 1:10.)

சங்கீதங்கள் 30:5

உம்முடைய கையில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்; சர்வ சத்தியமுடைத்தான தேவனாகிய ஆண்டவரே! நீர் என்னை மீட்டுப் போட்டீர்.

சங்கீதங்கள் 5:3

ஏனெனில் நான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வேன்; (நீரோவெனில்,) கர்த்தாவே காலை நேரத்தில் என் குரற் சத்தத்தைக் கேட்டருளுவீர்.

இசாயாஸ் ஆகமம் 30:18

ஆதலால் ஆண்டவர் உங்க ளுக்குக் கிருபை பாலிக்கவே நீங்கள் தபஞ் செய்யும்படி காத்திருக்கின் றனர்; உங்களுக்கு மன்னித்தலால் மகிமை பாராட்டிக்கொள்வர்; ஏனெ னில் ஆண்டவர் நீதிக் கடவுள்; அவருக்குக் காத்திருப்போர் பாக்கிய வான்களே.

சங்கீதங்கள் 103:8

தேவரீர் நியமித்த இடத்தில் பர்வதங்கள் உயர்ந்து கணவாய்கள் தாழ்ந்துபோகின்றன.

தீமோத்தேயு 1 1:16

ஆனாலும் நித்திய ஷஜீவியத்தை அடையும்பொருட்டு இனிக் கிறீஸ்து சேசுநாதரை விசுவசிப்பவர்களுக்கு மாதிரி யுண்டாயிருக்கும்படியாக முந்தின (பாவி யாகிய) என்னிடத்தில் அவர் எவ்வித பொறுமையையும் காண்பிக்கச் சித்தமானதால் (நான் இரக்கமடைந்தேன்).

இராயப்பர் பொது நிருபம் 2 3:8

மிகவும் பிரியமானவர்களே, நீங்கள் இந்த ஒரு காரியத்தை அறியாதிருக்கப்படாது; அதாவது: கர்த்தர் சமுகத்தில் ஒருநாள் ஆயிரம் வருஷம்போலும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலுமாம். (சங். 89:4.)

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 24:42

ஆதலால் விழித்திருங்கள். ஏனெ னில் உங்கள் ஆண்டவர் எந்நேரத்தில் வருவாரென்று நீங்கள் அறியீர்கள்.

யோவேல் ஆகமம் 2:13

உங்கள் வஸ்திரங்களை (மாத்திரம்) அல்ல; உங்கள் இருதயங் களையும் (மனஸ்தாபத்தால்) கிழித்து,

உங்கள் தேவனாகிய ஆண்டவரிடந் திரும்புங்கள்; ஏனெனில், அவர் நல்ல வர், இரக்கமுள்ளவர், பொறுமை யுள்ளவர், மிகுந்த தயையுடையவர், தீமைமீது பச்சாத்தாபங் கொள்பவர் (சங். 85:5).

தீமோத்தேயு 2 4:2

நீர் தேவ வாக்கியத்தைப் பிரசங்கம்பண்ணக்கடவீர். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் அதில் ஊன்றி நிற்பீராக. எவ்விதப் பொறுமையோடும், உபதேசத்தோடும், கண்டித்து, மன்றாடி, கடிந்து கொள்வீராக. எவ்விதப் பொறுமையோடும், உபதேசத்தோடும், கண்டித்து, மன்றாடி, கடிந்து கொள்வீராக.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 24:13

ஆனாலும் முடிவுபரியந்தம் நிலை நிற்பவன் எவனோ, அவனே இரட்சிக் கப்படுவான்.